DEPOSITION OF WITNESS
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM
C.C.No.347/2025
PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | சாமிதுரை (Lw -1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்)**

**(BNSS பிரிவு 348-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை)**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **Date : 02.07.2026**

நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு எவ்வளவு விவசாயம் நிலம் உள்ளது 2 ஏக்கர் நிலம் உள்ளது. எதிரிகளின் தகப்பனார் பாலு என்பவர் எனக்கு எவ்வகையில் உறவினர் என்றால் எனது தம்பி ஆவார். பாலுவுக்கு 60 செண்ட் விவசாய நிலம் உள்ளது என்றால் சரிதான். எனது நிலமும் எனது தம்பியின் நிலமும் அருகு அருகேதான் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டில் இருந்து கிழக்கு பக்கமாக சென்று மீண்டும் தெற்காக திரும்பி மீண்டும் மேற்கு நோக்கி செல்லும் பாதை வழியாக சென்றால் எனது நிலம் உள்ளது என்றால் சரிதான்.

எனக்கும் எனது தம்பி பாலுவுக்கும் பூர்வீக சொத்து இருந்தது என்றாலும், அதனை நாங்கள் பாகபிரிவினை செய்துகொண்டோம் என்றாலும் சரிதான். மேற்படி பாகபிரிவினை செய்ததில் இருந்து எனக்கும் எனது தம்பிக்கும் மன வருத்தம் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி எனது தோட்டத்திற்கு செல்லும் பாதை சம்மந்தமாகவும், எனக்கும் எனது தம்பிக்கும் பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி தட பிரச்சனை சம்மந்தமாக ஊரார் பஞ்சாயத்து பேசி தடத்தில்

அத்துக்கல் அமைத்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். எத்தனை அத்துகல் அமைக்கப்பட்டது என்றால் வடக்கு தெற்காக 6 கல்களும், கிழ மேற்காக 3 கற்களும் அமைக்கப்பட்டது.

மேற்படி தடத்தில் வடக்கு தெற்கிலும், கிழ மேலும் சந்திக்கும் இடத்தில் உள்ள முனைக்கல்லில் தான் எங்களுக்குள் பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி தடத்தின் வழியாகத்தான் எனது நிலத்திற்கு வண்டி வாகனங்கள் எடுத்து செல்ல முடியும் என்றால் சரிதான். கடந்த 12.04.2025ம் தேதி எதிரிகள் எனது மனைவியிடம் பிரச்சனை செய்தது குறித்துதான் நான் எதிரிகளுடன் சென்று கேட்டேன் என்றால் சரிதான். கடந்த 12.04.2025ம் தேதி மேற்படி முனை கல்லை நான் தான் நட்டேன் என்றால் சரிதான். மேற்படி முனைக்கல் நட்டபோது ஊராரும் சர்வேயரும் யாரும் இல்லை என்றால் சரிதான். அச்சமயத்தில் எதிரிகளும் அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான்.

எதிரிகள் என்னை அடித்ததாக சொல்வது பொய் என்றாலும், நான் எதிரிகளை கல்லால் அடித்து துரத்தியதால் தான் எதிரிகள் சம்பவ இடத்தில் ஓடினார்கள் என்றால் சரியல்ல. அவர்களை துரத்தி சென்றபோதுதான் நான் கீழே விழுந்து எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் காயத்திற்கு சிகிச்சை பெற்ற பின்னர் காவல்நிலையம் சென்று எதிரிகள் மீது புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எனக்கு காயம் ஏற்பட்ட பின்னர் எனது மனைவி ராஜம்மாள் சென்று ஜெயபால் மற்றும் அஜித் ஆகியோரை மருத்துவமனை செல்ல அழைத்து வந்தார் என்றால் சரிதான். எனக்கும் பாலு குடும்பத்திற்கும் தட பிரச்சனை சுமார் 20 ஆண்டுகளாக இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி தட பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் மீது நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் செம்மேடு மருத்துவமனையில் இருந்து மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**